# பிரதிப் பிரதம செயலாளர் அலுவலகம் (நிருவாகம்) - கிழக்கு மாகாணம்
# නියෝජ්‍ය ප්‍රධාන ලේකම් කාර්යාලය (පරිපාලන) - නැගෙනහිර පළාත
# OFFICE OF THE DEPUTY CHIEF SECRETARY (ADMINISTRATION) - EASTERN PROVINCE

எனது இல. / මගේ අංකය. / My No. EP/02/Circular/2017

உமது இல. / ඔබේ අංකය. / Your No.

திகதி. / දිනය. / Date: 2017.05.08

**சுற்றறிக்கை இலக்கம்:DCS(A)/01/2017**

சகல செயலாளர்கள்
பிரதிப் பிரதம செயலாளர்கள்
திணைக்களத்தலைவர்கள் மற்றும்
நிறுவனத் தலைவர்கள்,
கிழக்கு மாகாணம்.

***<u>கிழக்கு மாகாண அரச முகாமைத்துவ உதவியாளர் சேவை அலுவலர்களுக்கு வினைத்திறமைகாண் தடைப்பரீட்சையில் சித்தியடைவது தொடர்பாக சலுகைக்காலம் வழங்கல்</u>***

2004.01.01 ஆந் திகதியில் இருந்து 2013.12.11 ஆந் திகதி வரையிலான கால எல்லையினுள் மாகாண அரச முகாமைத்துவ உதவியாளர் சேவையின் III ஆந் தரத்திற்கு நியமனம் பெற்ற மற்றும் அக்கால எல்லையினுள் II ஆந் தரத்திற்கு பதவியுயர்வு பெற்ற அலுவலர்கள் வினைத்திறன் காண் பரீட்சையில் சித்தியடைவது தொடர்பாக அவர்களது நியமன/ பதவியுயர்வு திகதியில் இருந்து தொடர்ந்து நடாத்தப்படும் அடுத்தடுத்து ஆறு (06) சந்தர்ப்பங்கள் வரையிலான சலுகைக் காலம் கீழே தரப்பட்டுள்ள ஏற்பாடுகளின் கீழ் வழங்குவதற்கு கிழக்கு மாகாண பொதுச்சேவை ஆணைக்குழுவினால் அனுமதியளிக்கப்பட்டுள்ளது என்பது பற்றி இத்தால் அறிவித்துக் கொள்கின்றேன்.

2. இதற்கு முன்னர் அவ் அலுவலர்கள் தொடர்பாக பொதுவாக அடுத்தடுத்த நான்கு (04) சந்தர்ப்பங்களின் போது மாத்திரம் சலுகை வழங்கப்பட்டிருந்ததுடன், அதற்குப் பின்னர் நடைபெற்ற பரீட்சைகளின் போது வினைத்திறன் காண் தடைப்பரீட்சையில் சித்தியடைந்த போதிலும் கூட சம்பள ஆண்டேற்றம் ஒத்திவைக்கப்பட்டது. எனினும், மேற்படி சலுகை காரணமாக, அடுத்தடுத்து ஆறு (06) சந்தர்ப்பம் வரை சம்பள ஆண்டேற்றம் ஒத்திவைக்கப்படாது III ஆம் தரத்திற்கும், II ஆம் தரத்திற்கும் உரிய வினைத்திறன்காண் தடைப்பரீட்சைகளில் சித்தியடைவதற்கு அலுவலர்களுக்கு சந்தர்ப்பங்கள் கிட்டுவதுடன், அச் சலுகைக் காலத்திற்கு உரிய சம்பள ஆண்டேற்றத்தை ஈட்டிக் கொள்வதற்கும் இதன் மூலம் வாய்ப்புக் கிடைக்கும்.

3. மேற்படி 02 ஆம் பந்தியின் காண்பிக்கப்பட்டுள்ளவாறு வினைத்திறன் காண் தடைப்பரீட்சையில் சித்தியடைவதில் தாமதமேற்படுவதன் காரணமாக சம்பள ஆண்டேற்றம் ஒத்திவைக்கப்படுதல் காரணமாக:

i. கிழக்கு மாகாண அரசாங்க சேவைக்கான தாபன நடைமுறை ஒழுங்கு விதிக்கோவையின் 97 ஆம் பிரிவின் கீழ் நன்னடத்தைக் காலம் நீடிக்கப்பட்டுள்ள III ஆம் தரத்தைச் சேர்ந்த அலுவலர்களுக்கும்:

ii. II ஆம் தரத்தைச் சேர்ந்த குறித்த வினைத்திறன் காண் தடைப்பரீட்சையில், குறித்த தினத்தன்று சித்தியடைய முடியாமற் போன அலுவலர்களுக்கும், மற்றும்

iii. மேற்படி காரணங்களின் அடிப்படையில் சாதாரண செயலாற்றத்திற்கமைய II ஆம் தரத்தின் மற்றும் I ஆம் தரத்திற்கான பதவியுயர்வு உரிய காலத்தை விட தாமதமாக கிடைக்கப்பெற்ற அலுவலர்களுக்கும்

இதன் கீழ் தமது ஒத்திவைக்கப்பட்ட சம்பள ஆண்டேற்றம் மற்றும் அதன் காரணமாக தாமதமான சாதாரண செயலாற்றம் ஆகியனவற்றுக்கு அமைய II ஆம் மற்றும் I ஆம் தரத்திற்கான பதவியுயர்வுகள் தொடர்பாக (2004.12.24 ஆந் திகதிய சேவைப் பிரமாணக் குறிப்பின் 11.3 மற்றும் 12.3 பிரிவுகளின் கீழ்) <u>மாத்திரம்</u> இற்றை வரையாக்குவதற்கு தத்தமது திணைக்களத் தலைவரின் சிபார்சுடன் கோரிக்கை ஒன்றை எனக்கு சமர்ப்பிக்கவும்.

7318

கன்னியா வீதி, வரோதய நகர்,
திருகோணமலை.
කන්නියා පාර, වරෝදය නගර්,
ත්‍රිකුණාමලය.
Kanniya Road, Varothaya Nagar,
Trincomalee.

Gen. Office I : 026 2224049
Gen. Office II : 026 2222114
Admin Officer : 026 3269885
Deputy Chief Secretaty : 026 2222703
Assistant Chief Secretaty I : 026 3269883
Assistant Chief SecretatyII : 026 2222593
Fax : 026 2227161
Web : www.ep.gov.lk
E-mail : admin@ep.gov.lk

4. இது கடந்த காலத்திற்குரியதான தாக்கம் செலுத்தக்கூடிய சலுகை வழங்கல் ஆவதுடன், கீழே குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள்/ கடந்த காலத்தில் இழக்கப்பட்ட சந்தர்ப்பங்கள் தொடர்பாக எந்தவொரு தீர்வும் தற்போது மேற்கொள்ள முடியாதபோதும், அவ்வாறான விடயங்களில் எட்டப்பட்ட கடந்தகால நடவடிக்கைகளுக்கு, எவ்வித பாதிப்பும் ஏற்படாதவாறு செயற்பட வேண்டியிருப்பதாலும், அது தொடர்பாக சமர்ப்பிக்கப்படும் மேன்முறையீடுகளை கவனத்திற்கொள்வதற்கான வாய்ப்பில்லை என்பது பற்றி வலியுறுத்துகின்றேன்.

i. இச் சலுகை உரித்தாவதற்கு முன்னரான சம்பள ஆண்டேற்ற ஒத்திவைப்பு காரணமாக பிற சேவைகளுக்கு பிரவேசிப்பதற்கான அல்லது பதவியுயர்வுகளுக்கான சந்தர்ப்பங்கள் இழக்கப்பட்டமை (2004.12.24 ஆந் திகதிய சேவைப் பிரமாணக் குறிப்பின் 11.2 மற்றும் 12.2 பிரிவுகளின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள) தொடர்பாக அல்லது போட்டிப்பரீட்சையின்/ நேர்முகப் பரீட்சையின் அல்லது அவ்வாறான எந்தவொரு தேர்வு தொடர்பாகவும் தோற்றுவதற்கான சந்தர்ப்பம் இழக்கப்பட்டமை குறித்து சலுகை கோரி சமர்ப்பிக்கப்படும் மேன்முறையீடுகள்.

ii. இச்சலுகை உரித்தாவதற்கு முன்னரான சம்பள ஆண்டேற்ற ஒத்திவைப்பு காரணமாக இழக்கப்பட்ட பதவியைப் பெற்றுக்கொள்வதற்காக சலுகை கோரி சமர்ப்பிக்கப்படும் மேன்முறையீடுகள்.

iii. இச் சலுகை உரித்தாவதற்கு முன்னரான சம்பள ஆண்டேற்ற ஒத்திவைப்பினை இனங்காணாது/ கவனத்திற் கொள்ளாது தவறுதலாக பதவியுயர்வுகள் அல்லது பிற போட்டிப் பரீட்சைகளுக்கு விண்ணப்பித்து அதில் சித்தியடைந்து நேர்முகப் பரீட்சையின் போது அல்லது பின்னர் எச் சந்தர்ப்பத்திலாவது சம்பள ஆண்டேற்ற ஒத்திவைப்பினை இனங்காணப்பட்டு அல்லது கவனத்திற் கொண்டு அதன் காரணமாக உரிய பதவியுயர்வு அல்லது பரீட்சையின் பெறுபேறுகளின் அடிப்படையில் செய்யப்படும் நியமனங்கள் அல்லது வரப்பிரசாதங்கள் இடைநிறுத்தப்பட்டுள்ள அலுவலர்களினால் அவ்வாறு இடைநிறுத்தப்பட்ட நியமனங்கள்/ வரப்பிரசாதங்கள் என்பனவற்றைப் பெற்றுக் கொள்வதற்காக சமர்ப்பிக்கப்படுகின்ற மேன்முறையீடுகள்.

5. இணைந்த சேவை சுற்றறிக்கை 01/2009 இன் ஏற்பாடுகளின் கீழ் அன்றைய தினத்திற்கு முன்னர் அரசாங்க முகாமைத்துவ உதவியாளர் சேவையின் II ஆம் தரத்திற்கு பதவியுயர்வு பெற்ற அலுவலர்களுக்கு வினைத்திறன் காண் தடைப் பரீட்சையில் சித்தியடைவது தொடர்பாக பரீட்சைக்கான ஆறு (06) வாய்ப்புக்களைக் கொண்ட சலுகை வழங்கப்பட்டுள்ளமையினால் அச் சலுகையை விஞ்சிய வகையில் இச் சுற்றறிக்கை மூலம் அவர்களுக்கு வேறேதும் சலுகை கிடைக்கப்பெற மாட்டா.

6. தங்களது வசதிக்காக அரசாங்க முகாமைத்துவ உதவியாளர் சேவையின் III தரத்திற்கு மற்றும் II ஆம் தரத்திற்கு உரித்தான வினைத்திறன் காண் தடைப் பரீட்சைகள் நடாத்தப்பட்ட திகதி கீழே தரப்பட்டுள்ளன.

| III தரத்திற்குரிய வினைத்திறன் காண் தடைப்பரீட்சை நடாத்தப்பட்ட திகதி | II ஆம் தரத்திற்குரிய வினைத்திறன் தடைப் பரீட்சை நடாத்தப்பட்ட திகதி | |
|---|---|---|
| | பரீட்சைத் திகதி | இ.சே.சு.01/2009 மூலம் முற்தேதியிடப்பட்ட திகதி |
| 2007.03.31 | 2007.03.31 | 2005.01.01 |
| 2008.08.30 | 2007.12.08 | 2005.07.31 |
| 2009.07.26 | 2008.10.25 | 2006.01.31 |
| 2010.07.17 | 2009.11.21 | 2006.07.31 |
| 2011.10.01 | 2010.11.13 | 2007.01.31 |
| 2013.01.27 | 2011.12.24 | 2007.07.31 |
| 2014.06.29 | 2013.03.16 | - |
| 2015.09.19 | 2014.05.10 | - |
| | 2015.05.23 | - |

***ஏ.எச்.எம்.அன்ஷார்,***
பிரதிப் பிரதம செயலாளர்-நிருவாகம்,
கிழக்கு மாகாணம்.

பிரதி:

1. பிரதம செயலாளர், பிரதம செயலாளர் செயலகம். கிழக்கு மாகாணம்.
2. செயலாளர், மாகாண பெதுச் சேவை ஆணைக்குழு, கிழக்கு மாகாணம்.